**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

STC No. : 173/2021

Name : Lakshmanan

P.W. : 1

Father Name :

Village :

Taluk : Madathukulam

Occupation :

Age : /2026

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**02.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பாப்பான்குளத்தில் வசிக்கிறேன். மேசன் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது மாமா மகன். 08.01.2020ம் தேதி மாலை 06.15 மணியளவில் பாப்பான்குளம் பிரிவில் நானும், எனது மனைவி ஸ்ரீதேவியும் Splendor TN 78 R 0381 இருசக்கர வாகனத்தில் பாப்பான்குளத்தில் இருந்து உடுமலை நோக்கி சென்று கொண்டிருந்த போது இருட்டாக இருந்தது அப்போது ஆஜர் அங்கமுத்து அவருடைய Splendor வாகன எண் சரியாக தெரியவில்லை மேற்கிலிருந்து கிழக்காக அவருடைய மனைவி ஆஷாராணியுடன் வந்து நேருக்கு நேர் இருவரும் மோதி விட்டோம். அதில் கீழே விழுந்து எனக்கு மூக்கில், இடது பக்க புருவத்தில் காயம் ஏற்பட்டு தலையில் open surgery செய்தார்கள். எனது மனைவிக்கு தாடையில் அடிபட்டது. உடுமலை அரசு மருத்துவமனைக்கு இருவரையும் அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்கு கோவை அரசு மருத்துவமனைக்கு இருவரையும் அழைத்துச் சென்றார்கள். மருத்துவமனையில் 15 நாட்கள் சிகிச்சை பெற்றோம். நாங்கள் மருத்துவமனையில் இருந்த போது போலீசார் வந்து விசாரித்தார்கள் அப்போது என்னுடன் எனது அண்ணன் ராமசந்திரன் உடன் இருந்தார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள

கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலத்தில் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) போலீஸில் விபத்து மாலை 07.15 மணிக்கு நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனக்கு நேரம் சரியாக தெரியவில்லை. அந்த சமயம் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். எனது வாகனத்தில் நான், எனது மனைவி மற்றும் எனது குழந்தை சென்றோம் என்றால் சரிதான். இருட்டில் மோதிய சத்தம் மட்டும் தான் கேட்டது என்றும் யாருடைய வாகனம் மோதியது என்று தெரியாது என்றால் சரிதான். இரு வாகனங்களும் நடு ரோட்டில் தான் மோதிக் கொண்டது என்றால் சரிதான். விபத்து நடந்த பின்பு பார்த்த போது எனது உறவினர் அங்கமுத்துவும் அவரது மனைவியும் அடிபட்டு கீழே கிடந்தார்கள் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் எதிரிக்கு நெற்றி, முகத்தில் ரத்தக்காயமும் அவரது மனைவிக்கு மொக்கை காயமும் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன் பின் காயம்பட்ட மூவரையும் உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் என்னையும், எனது மனைவி ஸ்ரீதேவியையும் அங்கமுத்துவையும் கோவை CMCH க்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நானும், எனது மனைவி பேசிக்கொண்டே சென்றதால் சிறிதாக தடுமாற்றம் ஏற்பட்டு விபத்து நடந்தது என்றால் சரியல்ல. விபத்திற்கும், எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.02

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 173/2021 |
| Name | : Shridevi |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பாப்பான்குளத்தில் வசிக்கிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரி அங்கமுத்துவை தெரியும். எனக்கு அண்ணன் முறை. 08.01.2020 ம் தேதி மாலை 06.30 மணி அளவில் TN 78 R 0381 என்ற எண் கொண்ட எனது கணவரின் இருசக்கர வாகனத்தில் அவர் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து எனது குழந்தையுடன் உடுமலைக்கு சென்று கொண்டிருந்த போது பாப்பான்குளம் பிரிவில் சத்தம் கேட்டது. அதன் பின் என்ன நடந்தது என்று தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து நான் உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்தேன். அங்கிருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் மருத்துவமனையில் ஒரு வாரத்திற்கு மேல் இருந்தேன். எனது கணவர் 2 வாரங்களுக்கு மேல் இருந்தார். எனக்கு தாடை கீழே இறங்கி காயம் ஏற்பட்டது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) மேற்படி விபத்தில் அங்கமுத்து மற்றும் மனைவிக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து என்னை எனது கணவர் மற்றும்

அங்கமுத்து மூவரையும் கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் இருட்டாக இருந்ததால் எதிரே வரும் வாகனம் தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான். யாருடைய தவறால் இந்த விபத்து ஏற்பட்டது என்று எனக்கு சரியாக தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.02 17:40:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்